12th November 1965]

(இ) அவைகள் என்ன வாடகைக்கு விடப்பட்டுள்ளன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The number of such houses is 3,106.

(b) A statement [a] is placed on the Table of House.

திரு. எம். எஸ். மணி : இப்படிக் கட்டிய விடுகளை யாருக்கு வாடகைக்கு விடுகிறார்கள், எந்த அடிப்படையில் கொடுக்கப் படுகிறது என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் ஸ்டேட்மென்டில் கொடுத்திருக்கிறது. சில வீடுகள் கவர்ன்மெண்ட் ஸர்வென்டுகளுக்கும், சில வீடுகள் பொதுமக்களுக்கும், இன்னும் சில வீடுகள் ஸ்லம் ட்வெல்லர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அதெல்லாம் ஸ்டேட்மென்டில் தனித் தனியாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : அந்த வீட்டில் குடியிருக்கிறவர்களுக்கு என்ன யோக்யதாம்சங்கள் இருக்க வேண்டும் என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு ஒரு கமிட்டி இருக்கிறது. சேரியிலிருந்து வேறு இடத்திற்கு அனுப்ப வேண்டும் என்று திட்டம் போட்ட பிறகு, சேரியிலிருந்து வருகிறவர்களுக்கு இந்த இடம் கொடுக்கப்படும் என்று செய்யப் படுகிறது. அதேபோல, சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், கமிட்டி பார்த்து தேர்ந்தெடுத்து கொடுக்கப்படுகிறது.

மின்சார வசதி

* 505 கேள்வி.—திரு. எஸ். மணி : கனம் கைத்தொழில் அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டத்தில் வெங்கலம் தொகுதியில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார வசதியளிக்கப் பட்டுள்ளது ?

(இ) இன்னும் மின்சார வசதியளிக்கப்பட வேண்டிய கிராமங்கள் எத்தனை ?

(உ) 1964–65-ம் ஆண்டில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்ய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 23.

(இ) 67.

(உ) 8.

திரு. எஸ். மணி : தலைவர் அவர்களே, எங்களுடைய வட்டாரத்தில் மின்சாரம் பயன்படவில்லை. ஒரு ஆண்டு காலமாக மின்சார வேலையை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு

a Printed as Appendix on pages 982–987.

இருக்கும் அவசியத்தை உணர்ந்து மின்சாரத்தைத் துரிதமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிதி பற்றாக்குறைதான் காரணம். அதனால்தான் இந்த ராஜ்யத்திலே இருக்கும் எல்லா இடத்திற்கும் ஒரே ஆண்டிலே விஸ்தரிக்க முடியவில்லை.

*** 506 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனியார் மின்சார சப்ளை ஸ்தாபனங்களுக்கு 1965–66-ல் கடன் வழங்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த ஸ்தாபனத்திற்கு எவ்வளவு கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes. The following Private Electric Supply Undertakings have been sanctioned loans so far during 1965–66 for extension of electricity to filter point tube-wells in Thanjavur District under the crash programme to step up agricultural production.

(1) The South Madras Electric Supply Corporation limited.—Rs. 7,98,200.

(2) The Kumbakonam Electric Supply Corporation limited.—Rs. 9,26,600.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, மின்சார போர்டு பட்ஜெட் விவாதத்தின்போது, தனியார் ஸ்தாபனங்களுக்கு கடன் கொடுக்கப்போவது இல்லை என்று அமைச்சர் கூறினார்கள். இப்பொழுது எப்படி கொடுத்திருக்கிறார்கள் என்பதை விளக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் கொள்கை, தனியார்களுக்கு மின்சார விஸ்தரிப்புக்கு என்று கொடுப்பதில்லை. ஆனால், இந்த உணவு நெருக்கடியைச் சமாளிக்க, மத்திய சர்க்காரிடமிருந்து, ஃபில்டர் பாயிண்ட் கிணறுகள் அமைக்கவென்று தனியாக ஒரு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அங்கே லைசென்ஸ்கள் இருப்பதால், தஞ்சையில் க்ராஷ் ப்ரோக்ராமை அமல் நடத்த கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தனியார் துறைக்கு கடன் வசதி அளித்திருந்தும், பல வருஷங்களாக, சில கிராமங்களில் ஆதித் திராவிடத் தெருக்களுக்கு மின்சாரம் கொடுக்கும் வேலை, உபகரணங்கள் இல்லை என்று சொல்லி, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி புகார்களும் வந்து இருக்கின்றன. கும்பகோணம் கம்பெனிபற்றி அதிலிருக்கும் ஊழல்கள் பற்றி புகார் அதிகம் வந்திருக்கிறது. அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.